பகுதிக்குக்கூட பயன்படும். இப்படி வருவதால் கீழ் நோக்கித் தான் அந்தக் கால்வாய் வரும் என்பதால் அதிகச் செலவு ஆகாது. பெரியாறு அபிவிருத்திச் செலவிலேயே செய்துவிடலாம். அதிகப் படியான ஏக்கர் நிலத்திற்குப் பாசனம் கிடைக்கும். பெரியாறு தண்ணீரைப் பார்த்துக் கொண்டுதான் இதுவரையில் நிலக் கோட்டை மக்கள் இருக்கிறார்கள். ஆகவே, இந்தத் திட்டத்தை விரைவில் நிறைவேற்றி, நிலக்கோட்டைக்கும் விரிவுபடுத்த அமைச்சர் அவர்கள் வழிவகை செய்யும் வகையில் நடவடிக்கை களை மேற்கொள்வார்களா ?

[முற்பகல் 10-30]

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே, 18-ம் கால்வாய் திட்டத்தில் இந்தப் பகுதி இடம் பெற வில்லை. ஆனால் வேறு வகையிலே பரிசீலனை செய்ய வேண்டுமென்று கோரிக்கை கொடுத்திருக்கிறார்கள். அதை அரசு பரிசீலனை செய்து வருகிறது. ஆகவே, இந்தத் திட்டத்தில் சேர்க்க வாய்ப்பு இருக்காது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். டி. கோபாலன் : தலைவரவர்களே, இந்தத் திட்டத்தினால் கூடலூர் பகுதி மக்களுக்குத் தண்ணீர் கிடைக்க வில்லை என்றால் ஒரு கொந்தளிப்பு ஏற்படும். ஆகவே, கூடலூர் பகுதி மக்களுக்கும் இந்தத் திட்டத்தினால் தண்ணீர் கிடைக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர் களே, திட்டத்தை ஆய்வு செய்து கொண்டிருக்கிறோம். அதற்குள்ளாக பயமுறுத்த வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சேலம் வனஸ்பதி தொழிற்சாலை.

*வினா எண் 226 திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா :

(அ) சேலம் மாவட்டத்தில் 10 டன் உற்பத்தித் திறன் படைத்த ஒரு வனஸ்பதி தொழிற்சாலை வெளியார் ஒருவருக்கு விற்கப்பட்டு 25 டன் உற்பத்தித்திறன் படைத்த தாக ஈரோட்டுக்கு மாற்ற முயற்சி நடப்பது தெரியுமா?

TRUTH ALONE TRIUMPHS

1981 மார்ச் 2]

(ஆ) இதனால் அங்கு பணியாற்றும் தொழிலாளர்களி டையே பதட்டநிலை உள்ளது அரசிற்கு தெரியுமா?

(இ) இதற்கு அரசு ஒப்புதல் வழங்கி விட்டதா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு ; (அ) மற்றும் (ஆ) மேட்டூர் கெமிக்கல்ஸ் இண்டஸ்டிரியல் கார்ப் பரேஷனுக்குச் சொந்தமான ஆண்டான்றுக்கு 3,000 டன் உற்பத்தித்திறன் உள்ள வனஸ்பதி தயாரிக்கும் தொழிற் சாலையை திருவாளர்கள் திரு. கிருஷ்ணா வனஸ்பதி ப்ரோடக்ட்ஸ், ஈரோடு விலைக்கு வாங்கியுள்ளது. இந்த தொழிற்சாலை பல வருடங்களாக மூடப்பட்டு உற்பத்தி செய்யாமல் இருந்தது. அதில் வேலை செய்த தொழி லாளர்கள் மூலநிறுவனத்தினால் வேறு வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு விட்டார்கள். இதனால் தொழிலாளர் பிரச் சினை ஏதும் இல்லை.

(இ) மைய அரசு இதற்கு அனுமதி வழங்கிவிட்டது.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவரவர்களே, இந்த வனஸ்பதி உற்பத்தி செய்கிற தொழிற்சாலையை இப்போது யாருக்கு மாற்றம் செய்திருக்கிறார்கள்? ஏன் இதை அரசாங் கம் ஏற்று நடத்தியிருக்கக் கூடாது?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவரவர் களே, மேட்டூர் கெமிக்கல்ஸ் இண்டஸ்டிரியல் கார்ப்பரேஷனுக்கு சொந்தமானது இந்தத் தொழிற்சாலை என்று ஏற்கனவே சொன்னேன். இப்போது ஸ்ரீ கிருஷ்ணா வனஸ்பதி ப்ரோடக்ட்ஸ், (ஈரோடு)-க்கு விற்கப்பட்டிருக்கிறது. அரசு அதை ஏற்று நடத்தவில்லை; தனியார்தான் நடத்துகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரி பார்க்கப் பெற்றது என்பதைக்குறிக்கும்.)